அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 316

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு.7
29 நவம்பர், 1985.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

17-ஜூலை 1980ஆம் திகதியிலிருந்து 22-ஜூலை 1980ஆம் திகதி வரையுள்ள காலப்பகுதியில் உத்தியோகத்தை விட்டு நீங்காத அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு விளைத்திறமைகாண் தடைகளும், 18-07-81ஆம் திகதி தொடக்கம் விசேட வேதனவேற்றங்களும்.

---

மேற்குறித்த விசேட வேதனவேற்றத்தைப் பெற்ற சில அரசாங்க உத்தியோகத்தர்கள் விளைத்திறமைகாண் தடையை அடைவதற்கு வழக்கமாக ஒரு உத்தியோகத்தர் எடுக்கும் காலத்தைப் பார்க்கிலும் ஒரு வருடம் முன்னதாக சம்பந்தப்பட்ட வேதனப்படி நிலையை அடைந்துவிடுகிறார்கள்.

அத்தகைய ஒரு உத்தியோகத்தர் விளைத்திறமை காண் தடையிலிருந்து பதவியுயர்வு அடைதற்கு/அதிலிருந்து விலக்களிக்கப்படுதற்கு உரிய தகைமையை அடைதற் பொருட்டு, விசேட வேதனவேற்றத்தைப் பெற்றதனால் அடைந்த வேதனப் படி நிலையைக் கருத்திற் கொள்ளாது வழமையாக அவர் பெற்றுக் கொள்ளக் கூடியதாயுள்ள முழுக் காலத்தையும் அவருக்கு வழங்குதல் வேண்டும்.

---

ஒப்பம்: டி.பி.ஐ.ப.எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.